CENTRE FOR POLICY ALTERNATIVES

# யுத்தத்துக்கு பின்னர் இலங்கையில் ஜனநாயகம்

17 ஆகஸ்ட 2011, கொழும்பு, இலங்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துக்கணிப்புப் பிரிவான சோஷல் இன்டிகேட்டர், சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வின் படி, இலங்கையர்கள், மீளக்கட்டியெழுப்புதல் - அரசாங்கம் முரண்பாடுகளுக்கான மூல காரணம் தொடர்பில் போதுமாக கவனம் செலுத்தியுள்ளதா இல்லையா எனும் விடயங்கள் பற்றிய அபிப்பிராயங்களில் வேறுபடுகின்றனர்.

தமிழ் சமூகத்தின் 32.3% மக்கள், அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை என்று தெரிவிக்கும் அதேவேளை சிங்கள சமூகத்தின 41.1% மக்கள், அரசாங்கம் நிறையவே செய்யதுள்ளது என்று தெரிவிக்கின்றனர். மலையகத் தமிழ் சமூகத்தின் 44%, முஸ்லிம் சமூகத்தின் 52% அரசாங்கம் சிறிதளவு செய்யதுள்ளது ஆனால் முரண்பாடுகளுக்கான மூல காரணம் தொடர்பில் போதுமாக கவனம் செலுத்தப்படவில்லை என்று நம்புகின்றனர்.

‘**யுத்தத்துக்கு பின்னர் இலங்கையில் ஜனநாயகம்**’ எனும் ஆய்வு, இன்று இலங்கையில் உள்ள ஜனநாயகம் தொடர்பில் மக்களின் கருத்து அதாவது, ஜனநாயகம் என்றதும் மக்கள் என்ன பொருள் கொள்கிறார்கள், அதில் எவ்வாறு பங்கெற்கிறார்கள், அவர்களின் பங்கேற்பு மற்றும் ஆட்சி கட்டமைப்புகள் மற்றும் சில முக்கியமான நிறுவனங்கள் தொடர்பிலான நம்பிக்கை போன்றவற்றை பதிவு செய்வதை நோக்கமாக கொண்டது. இந்த ஆய்வில் உள்ளடக்கப்பட்ட முக்கியமான சில பிரிவுகளாக, பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு, இலங்கையில் உள்ள ஊடகங்கள் பயன்படுத்தப்படும் விதம் தொடர்பிலான பார்வை, அரசியல் பற்றிய அபிப்பிராயம், சுதந்திரம் தொடர்பிலான மதிப்பீடு, அரசியல் தலைவர்கள் பற்றிய மதிப்பீடு, அரசாங்கத்தின் செயற்பாடு, ஊழல் மற்றும் அபிவிருத்தி ஆகிய விடயங்கள் காணப்படுகின்றன.

இந்த ஆய்வு நாட்டின் 25 மாவட்டங்களிலும், நான்கு பிரதான இனக்குழுக்களையும் சார்ந்த 1993 மக்களுடன் மேற்கொள்ளப்பட்டது. பதிலளிப்பவர் தெரிவானது, அனுகுதல் கடினமாக அமைந்த சில குறிப்பிட்ட பிரதேசங்கள் தவிர்ந்த மற்றைய பிரதேசங்களில் எழுமாறாக நடாத்தப்பட்டது. வெளிக்கள வேலையானது 2011 மார்ச் முதல் ஜுன் வரை நடந்தது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில், நாட்டின் இனப்பிரச்சினைகான அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைப்பதற்காக அமைக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாக கொண்டு அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று 29.7% சிங்களவர்கள், 59.1% தமிழர்கள், 30.8% மலையகத் தமிழர்கள் மற்றும் 53.5% முஸ்லிம்கள் எண்ணுகின்றனர். எவ்வாறாயினும், எல்.ரீ.ரீ.ஈயை இராணுவ ரீதியில் முற்றாக வெற்றி கொண்ட நிலையில் அரசியல் தீர்வுக்கான தேவை இல்லை என்று 17.6% சிங்களவர்கள், 4% தமிழர்கள், 11.1% மலையகத் தமிழர்கள் மற்றும் 14.2% முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய அபிவிருத்தி செயற்பாடுகளில் முதன்மையானதாக காண விரும்புவது வாழ்க்கைச் செலவு குறைவடைதலே எனும் கருத்தினை நான்கு இனத்தவர்களும் கொண்டுள்ளனர். சிங்கள சமூகத்தை பொருத்தவரை, அபிவிருத்தி செயற்பாடுகளில் காண விரும்புவதில் இரண்டாவது தெரிவாக உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படல் அமையும் அதேவேளை, மற்றைய மூன்று சமூகத்தவர்களுக்கும் வேலைவாய்ப்பின்மை மற்றும் மேலதிக தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் என்பது இரண்டாவது தெரிவாக அமைகிறது.

இலங்கையர்களில் 65% மக்கள், பெரும்பான்மையாக சிங்கள சமூகத்தவர்கள், நாடு மிக விரைவாக அபிவிருத்தி அடைவதாக இருந்தாலும், ஊழல் என்னும் விடையத்தை அலட்சியப்படுத்த முடியாது என்று தெரிவித்துள்ளனர். மேலும், நான்கு சமூகத்தவர்களிலும் அனேகமானவர்கள், அதிக ஊழல் பொலிஸ் மத்தியிலேயே உள்ளது என்று நம்புகின்றனர்.

பொருளாதாரம் பற்றிய தமது மதிப்பீட்டில், நான்கு சமூகத்தவர்களிலும் அனேகமானவர்கள், அரசாங்கம் திறமையாக செயற்படுவதாக நம்புகின்றனர். எவ்வாறாயினும், பொருளாதார விடயத்தில் அரசாங்கம் திறமையாக செயற்படவில்லை என 26.2% சிங்களவர்கள், 24% தமிழர்கள், 18.4% மலையகத் தமிழர்கள் மற்றும் 29.2% முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் நல்ல நிலையை அடைந்துள்ளது என்று 10.7% இலங்கையர்கள் தெரிவிக்கும் அதேநேரம் 38% மக்கள் ஓரளவு நல்ல நிலையை அடைந்துள்ளது என்று தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், 19.7% ஓரளவு மோசமான நிலையை அடைந்துள்ளது என்றும் 16% மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

வீட்டு மட்டத்திலான பொருளாதார நிலைமை பற்றி தெரிவிக்கையில், கடந்த இரண்டு வருட காலத்தில் நல்ல நிலையை அடையவில்லை என்று அனேகமானவர்கள் குறிப்பிடுகின்றனர். 3.7% இலங்கையர்கள் மட்டும் மிகவும் நல்ல நிலையை அடைந்துள்ளது என்று தெரிவிக்கையில், 27% இனர் சிறிதளவு நல்ல நிலையை அடைந்துள்ளது என்று தெரிவிக்கின்றனர். 58.3% மலையகத் தமிழர்கள், கடந்த இரண்டு வருட காலத்தில் தமது வீட்டு பொருளாதார நிலைமை மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது என்று தெரிவிக்கினறனர்.

……………………

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (Centre for Policy Alternatives) கருத்துக் கணிப்புப் பிரிவான சோஷல் இன்டிகேட்டர் (Social Indicator) இலங்கையில் சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், உயர்தொழில் ரீதியானதும், சுயேச்சையானதுமான கருத்துக் கணிப்பு தேவைக்கான நீண்ட கால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ல் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பம் முதல், ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவியாக கருத்துக் கணிப்பு அமைகிறது என்ற ஆழமான நம்பிக்கையின் அடிப்படையில், சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் பரந்த அளவிளான ஆய்வுகளை சோஷல் இன்டிகேட்டர் மேற்கொண்டு வருகிறது.

ஆய்வின் முக்கிய முடிவுகள் உடனடி தரவிறக்கத்திற்கு இங்கே கிடைக்கும் XXXX

தயவு செய்து மேலதிக விபரங்களுக்க இரோமி பெரேராவை iromi@cpasocialindicator.org தொடர்பு கொள்க

கடந்த இரண்டு வருடங்களில், முப்பது வருட யுத்தத்திற்கு காரணமாய் அமைந்த முரண்பாடுகளுக்கான அடிப்படைக்காரணம் தொடர்பில் அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என நீங்கள் நினைக்கிறீர்களா?




கடந்த 2 வருட காலத்துடன் ஒப்பிடும் போது தற்போது உங்களது வீட்டின் பொருளாதார நிலைமை எத்தகையது?

